## திருத்துறைப்பூண்டி நகராட்சி

## அவசரக் கூட்ட அறிக்கை

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் **29–08–2018** வியாழக் கிழமை மாலை **3.00** மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் அவசரக் கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி
நாள்: 28–07–2018

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

### பொருள் எண் 1:

தஞ்சாவூர் மண்டலத்தில் உள்ள திருத்துறைப்பூண்டி நகராட்சியில் வசிக்கும் 24,404 மக்கள் தொகை கொண்ட பொதுமக்களுக்கு நகராட்சியில் நாள்தோறும் 16.00 இலட்சம் லிட்டர் குடிநீர் தினசரி காலை ஒருமுறை வீதம், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு **62** லிட்டர் வீதம் கீழ்க்கண்ட நீராதாரங்களின் அடிப்படையில் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | நீராதார இருப்பிடம் | மேல்நிலைத் தொட்டி அமைவிடம் | மேல்நிலைத் தொட்டி கொள்ளளவு (LL) | குடிநீர் விநியோகிக்கப்படும் கால அளவு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | C.W.S.S. | பேருந்து நிலையம் | **15.00** | தினசரி காலை **2.00** மணி நேரம் |
| 2. | C.W.S.S. | அரியலூர் | **0.30** | |
| 3. | C.W.S.S. | சிங்களாந்தி | **0.30** | |
| 4. | C.W.S.S. | அண்ணா நகர் | **0.30** | |

மேலும், திருத்துறைப்பூண்டி நகராட்சியில் மொத்தமுள்ள **24404** மக்கள் தொகை கொண்ட பொதுமக்களுக்கு 16.00 இலட்சம் லிட்டர் தண்ணீரின் அளவு 8348 சொத்துவரி விதிப்புதாரர்களில் 2154 எண்கள் குடியிருப்புகளுக்கும் 115 எண்கள் வணிக உபயோகத்திற்கும் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 5697 எண்கள் சொத்துவரி குடியிருப்புகளில் 2968 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிக்கு டுபிட்கோ மூலம் வட்டியில்லா கடனாக ரூ.101.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை கடிதம், ந.க.எண்.13277/2018, W.S.1, நாள்.19.06.2018–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 13277/2018/கு.வ.1, நாள்.19.07.2018–ந் தேதிய கடிதத்தின்படி, 29.06.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்ட நடவடிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க அனைத்துப் பகுதிகளுக்கும் தினமும் சீரான குடிநீர் வழங்க ஏதுவாக தற்போதுள்ள குடிநீர் விநியோக முறையை (Distribution System) சரி செய்து அனைத்துப் பகுதிகளுக்கும் ஒதே மாதிரியாக கடிநீர் அழுத்தத்துடன் கூடிய விநியோக முறையாக (District Metering Area) மாற்றியமைக்க கலந்தாலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், மேலும் இதற்கான செலவினத்தாதை Project Development Grant

Fund (PDGF) அல்லது (Project Preparation Fund (PPF) நிதியின்கீழ் மேற்கொள்ளவும், நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**
**ந.க.எண்.1596/2018/இ1**

## பொருள் எண் 2 :

**2018–19** முதல் அரையாண்டு **(01.04.2018)** முதல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்வது தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் **73** நாள் **19.7.2018–ன்படி** அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் அரசாணை நகல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
ந.க.எண். 2547/2018/அ1

## பொருள் எண் 3:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அனுமதி பெற்ற மனைப்பிரிவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்கான கீழ்க்கண்டுள்ள இடங்களை தமிழ்நாடு பூங்காக்கள், விளையாடுமிடம் மற்றும் திறவிட சட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்க சட்டப் பிரிவு **3(2)** (எ)–ன்படி அங்கீகரிக்கப்பட்ட பூங்காவாக தமிழ்நாடு அரதசிதழில் விளம்பரம் செய்து அங்கீகரிக்க அரசினை கேட்டுக்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பூங்காக்களின் பெயர் | சர்வே எண் | பரப்பளவு சதுர அடி |
|---|---|---|---|
| **1.** | ஸ்ரீசாய் நகர் | வார்டு–சி, பிளாக்–26, சர்வே எண் **247/1**சி | **7392** |
| **2.** | சாய் என்கிலேவ் நகர் | வார்டு–ஏ, பிளாக்–1, சர்வே எண் **13/7, 14/1**ஏ**3, 14/1**பி, **161**ஜி**(5)** | **13322** |
| **3.** | ஜே.கே.ஆர்.கார்டன் | வார்டு–ஏ, பிளாக்–1, சர்வே எண் **196**பி, **18/3, 16/1**ஜி**1, 16/2, 16/1**ஜி**2** | **44685** |
| | கூடுதல் | | **65399** |

அலுவலக குறிப்பு :

அனுமதி பெற்ற மனைப்பிரிவுகளின் உரிமையாளர்கள் தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்துள்ள மேற்கண்ட பூங்காக்களை தமிழ்நாடு அரசிதழில் விளம்பரம் செய்து பிரேரணை அரசுக்கு அனுப்பிவைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 6792 /2001/எப்1)**

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

.

## திருத்துறைப்பூண்டி நகராட்சி

## <u>இயல்பு கூட்ட அறிக்கை</u>

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31–08–2018 வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் இயல்பு கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி　　　　　　　　　　தனி அலுவலர்,
நாள்: 30–08–2018　　　　　　　　　　திருத்துறைப்பூண்டி நகராட்சி.

### பொருள் எண் 1:

நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்ட்–2018 மாதத்தின் நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**　　　பதிவு செய்யலாம்.

### பொருள் எண் 2:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான மீன்பாசி குளங்கள் மற்றும் பலன் தரும் மரங்கள் ஆகியவற்றிற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 30.06.2019 வரையுள்ள காலங்களுக்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 318 நாள் 29.06.2018–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்பேரில் 14.08.2018ஆம் தேதியன்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது. மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு திரு.க. சீத்தாராமன்/கண்ணன் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகையினை உறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் திருவாளர்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | பிடாரிக் குளம் | வே.பன்னீர்செல்வம்/வேலு, கீழ சிங்களாந்தி, திருத்துறைப்பூண்டி. | 6600/– |
| 2. | | க. சீத்தாராமன்/கண்ணன், வெட்டுக்குளத் தெரு, திருத்துறைப்பூண்டி. | 6700/– |

அலுவலக குறிப்பு :

வரிசை எண் 2–ல் திரு.க. சீத்தாராமன்/கண்ணன், என்பவரது ஏலக்கேள்வி தொகை ரூ.6700/–க்கு சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ.6400/–ஐ விட ரூ.300/– கூடுதலாக கோரியுள்ளதால் அன்னாரது கேளவித் தொகையினை மன்றம் உறுதி செய்யலாம்.

<u>(ந.க.எண்.1573/2018/அ2)</u>

### பொருள் எண் 3:

மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகளில் 1.4.2018 முதல் மேற்கொள்ளப் படவுள்ள சொத்து வரி சீராய்வு குறித்து அரசாணை எண் 73 ந.நி.(ம) கு.வ.துறை நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண் 76 ந.நி.(ம) கு.வ.துறை நாள் 26.07.2018ல் கீழ்க்காணும் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகள், மக்களுக்கான குடிநீர், வடிகால், சாலை போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவதற்கென பெரும் செலவில் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வரும் இவ்வேலையில் நகர்புற உள்ளாட்சி

அமைப்புகளில் சொந்த வருவாயை உயர்த்தி அமைக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளன. சொந்த வருவாயின் முக்கிய கூரான சொத்து வரியின் மூலமான வருவாயை பொது சீராய்வின் மூலமாக பெருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதே வேலையில் குடியிருப்புகள் உள்ளிட்ட சொத்துக்களின் உரிமையாளர்கள் சிரமத்திற்குள்ளாகலாம் என்பதை கருத்தில் கொண்டு, சொத்து வரி உயர்வு தற்போதுள்ள அரையாண்டு சொத்து வரியில், குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும், தொழிற்சாலை கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும், வணிக கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் அமைந்திருக்கலாம் என வழிகாட்டுதல் நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளத. இந்த உயர்வு சதவீதத்தை அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி மன்றமே அதன் வருவாய் மற்றும் செலவினங்களை கருத்தில் கொண்டு அரசு நிர்ணயித்துள்ள உயர்வு சதவீதத்திற்குள் இருக்கும்படியாக தீர்மானித்துக்கொள்ளலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு:

இந்நகராட்சியின் சொந்த வருவாய் சொத்து வரியின் மூலமாக கடந்த ஆண்டில் (2017–18) ரூ.95.77இலட்சமாகும். நகராட்சியால் கீழ் குறிப்பிட்டவாறு செலவினங்கள் மேற்கொள்ளப் படுகிறது.

| | ஆண்டுக்கு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|
| பொதுசுகாதாரப் பணிகள் | 74.89 |
| மின் கட்டணம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு | 26.62 |
| சாலை வடிகால் பராமரிப்பு மேம்பாடுகள் | 49.55 |
| தொலைபேசி கட்டணங்கள் | 0.98 |
| வாகனங்கள் பராமரிப்பு மற்றும் எரிபொருள் | 11.41 |
| பணியாளர்கள் ஊதியம் | 255.27 |
| இதர பராமரிப்பு செலவுகள் | 70.57 |
| சர்வே கட்டணம் | 0 |
| தணிக்கை கட்டணம் | 0.51 |

மேற் குறிப்பிட்ட அத்தியாவசிய செலவினங்களோடு திட்ட நிதியில் பெறப்படும் மான்யங் களுக்கு நகராட்சியின் பங்களிப்பும் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | ஆண்டுக்கு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|
| HUDCO | கடந்த ஆண்டில் செலுத்திய அசல் மற்றும் வட்டி ரூ.12.00 இலட்சம் நிலுவை ரூ.289.10 இலட்சம் |
| IUDP | கடந்த ஆண்டில் செலுத்திய அசல் மற்றும் வட்டி இல்லை நிலுவை ரூ.6.50 இலட்சம் |

பணியாளர்களின் ஊதியம் உள்ளிட்ட செலவினங்கள் 49% உட்பட்டிருந்தால் மட்டுமே காலியிடங்கள் பூர்த்தி செய்ய இயலும். மேலும், ஆண்டிற்கு இரண்டு முறை அகவிலைப்படி உயர்வு மற்றும் பொங்கல் போனஸ் ஆகியவையும் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் செலவினம் 25% உயர்ந்துகொண்டே செல்வதால் நகராட்சியின் சொந்த வருவாயைவிட கூடுதல் செலவினம் ஏற்படுகிறது.

கூடுதல் செலவினத்தினை ஏற்க நகராட்சியின் சொந்த வருவாயினை கடந்த ஆண்டைவிட 50 சதவீதத்திற்கு மேல் உயர்த்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சொத்து வரி சீராய்வு குறித்த கலந்தாய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, நகராட்சியின் மேற்குறிப்பிட்ட செலவினங்கள் மற்றும் நிதிச் சுமையினை கருத்தில்கொண்டு மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.2547/2018/அ1)**

## பொருள் எண் 4 :

இந்நகராட்சியின் வடபாதி ஆற்றங்கரையில் பகுதியிலுள்ள புதிய உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள தரம் பிரிக்கும் ஷெட் (Segregation shed)–ல் தரைத்தளத்தில் விடுபட்டுள்ள பகுதிக்கு கான்கிரீட் தளம் அமைத்திட ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.62இலட்சமாகும். இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.2887/2018/இ1)**

## பொருள் எண் 5 :

இந்நகராட்சியின் இராமமடத் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2016–17ன்கீழ் அமைக்கப்பட்டுள்ள பயணியர் நிழற்குடைக்கு இருக்கை வசதி, மின் வசதி, கான்கிரீட் தளம், தடுப்பு வசதி மற்றும் பெயிண்டிங் செய்தல் ஆகிய கூடுதல் வசதிகள் செய்து தருவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.35இலட்சமாகும். இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.2886/2018/இ1)**

## பொருள் எண் 6 :

2018–19 முதல் அரையாண்டு (01.04.2018) சொத்து வரி பொது சீராய்வு நடைமுறைப்படுத்துவதை முன்னிட்டு வரி சீராய்விற்கு தேவையான படிவங்கள் அச்சிடுதல், முதன்மை பதிவேடு (Master Register) தயாரித்தல், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்தல், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தல், வார்டு வாரியான வரைபடம் தயாரித்தல், சொத்து வரி சுய மதிப்பீட்டு படிவம் பூர்த்தி செய்து உரிய காலத்திற்குள் தாக்கல் செய்ய வரி விதிப்புதாரர்களுக்கு அறிவுறுத்திட உள்ளூர் கேபிள் தொலைக்காட்சி, ஆட்டோ ஒலிப்பெருக்கி மற்றும் பேனர்கள் (Flex Board) அமைத்து விளம்பரம் செய்தல் போன்ற பணிகளுக்கான உத்தேச செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.2547/2018/அ1)**

## பொருள் எண் 7 :

இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19ன்கீழ் புதிய பேருந்து நிலையத்தில் கழிப்பறை பராமரிக்கும் பணி ரூ.0.60இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 308 நாள் 30.05.2018–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. பை. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ்.மங்கையர்கரசி | 45388.40 | 45332.70 | 0.12% குறைவு |
| 2. | எஸ். மாரியம்மாள் | | 46660.40 | 2.80% அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.12% சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.மங்கையர்கரசி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.களண்.1807/2018/இ1)**

## பொருள் எண் 8 :

இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19ன்கீழ் வார்டு எண் 1,மன்னை சாலையில் வாம்பே கழிப்பறை பழுதுபார்க்கும் பணி ரூ.0.40இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 309 நாள் 30.05.2018–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. பை. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ். மாரியம்மாள் | 30225.72 | 30194.86 | 0.10% குறைவு |
| 2. | எஸ்.மங்கையர்கரசி | | 30611.80 | 1.28% அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.10% சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.மாரியம்மாள் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.கஎண்.1806/2018/இ1)**

## பொருள் எண் 9 :

இந்நகராட்சியின் குடிநீர் நிதி 2018–19ன்கீழ் வார்டு எண் 16, ரொக்கக்குத்தகை பகுதிக்கு பைப் லைன் அமைக்கும் பணி ரூ.2.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 313 நாள் 30.05.2018–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. பை. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | எழில் எண்டர்பிரைசஸ் | 172305.89 | 172280.66 | 0.01% குறைவு |
| 2. | எஸ்.பாலசுப்ரமணியன் | | 174268.00 | 1.14% அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள எழில் எண்டர்பிரைசஸ் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.கஎண்.1179/2018/இ1)**

## பொருள் எண் 10 :

இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19ன்கீழ் வார்டு எண் 16, புதிய பேருந்து நிலையத்தில் கழிவறைக்கு போர்வெல் அமைக்கும் பணி ரூ.2.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 333 நாள் 29.06.2018–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 25.07.20178 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. பை. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ்.பாலசுப்ரமணியன் | 127224.15 | 127192.50 | 0.02% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | எழில் எண்டர்பிரைஸ்ஸஸ் | | 127341.00 | 0.09% அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02% சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள எஸ்.பாலசுப்ரமணியன்என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.கஎண்.2159/2018/இ1)**

## பொருள் எண் 11 :

இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018—19ன்கீழ் வார்டு எண் 13, அபிஷேககட்டளையில் ஐ.எஸ்.பி.கழிவறை பராமரிக்கும் பணி ரூ.0.46 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 311 நாள் 30.05.2018—ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயா் மற்றும் முகவரி திருவாளா்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. பை. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | பி.கண்ணன் | 34308.60 | 34083.05 | 0.66% குறைவு |
| 2. | எஸ்.மங்கையா்கரசி | | 35209.80 | 2.63% அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.66% சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள பி.கண்ணன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.கஎண்.1809/2018/இ1)**

## பொருள் எண் 12 :

இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018—19ன்கீழ் வார்டு எண் 21, பெரியநாயகிபுரம் வாம்பே கழிவறை பராமரிக்கும் பணி ரூ.0.55 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 312 நாள் 30.05.2018—ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயா் மற்றும் முகவரி திருவாளா்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. பை. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ்.மங்கையா்கரசி | 43111.25 | 42789.00 | 0.75% குறைவு |
| 2. | எஸ். மாரியம்மாள் | | 43728.60 | 1.43% அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.75% சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.மங்கையா்கரசி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.கஎண்.1809/2018/இ1)**

## பொருள் எண் 13 :

இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19ன்கீழ் வார்டு எண் 6, அரசலடி தெருவில் கழிவறை பராமரிக்கும் பணி ரூ.0.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 310 நாள் 30.05.2018–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. பை. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ்.மங்கையர்கரசி | 24239.44 | 24344.08 | 0.39% குறைவு |
| 2. | எஸ். மாரியம்மாள் | | 24946.24 | 2.07% அதிகம் |

அலுவலக குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.39% சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.மங்கையர்கரசி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.களண்.1808/2018/இ1)**

## பொருள் எண் 14 :

இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19ன்கீழ் வேதாரண்யம் சாலையிலுள்ள கழிவறைக்கு போர்வெல் அமைக்கும் பணி ரூ.1.05 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 332 நாள் 29.06.2018–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. பை. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | பி. கண்ணன் | 92075.20 | 91966.00 | 0.12% குறைவு |
| 2. | எஸ்.மங்கையர்கரசி | | 92738.90 | 0.72% அதிகம் |

அலுவலக குறிப்பு :

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.12% சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. பி.கண்ணன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**(ந.களண்.2172/2018/இ1)**

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.